குஜராத் மாநிலம், அகமதாபாத்தில், வஃபு சட்டத்திருத்தம் குறித்து ஆலோசிக்க நடைபெற்ற வஃபு வாரிய நாடாளுமன்ற கூட்டுக்குழுக் கூட்டத்தில் மக்களவை கழகக் கொறடா ஆ.இராசா அவர்கள் கலந்துகொண்டு பேசினார். இதில் மாநிலங்களவை கழக உறுப்பினர் எம்.எம். அப்துல்லா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

தமிழர் தந்தை சி. பா. ஆதித்தனார் அவர்களின் 120வது பிறந்த நாளை ஒட்டி அவரது திருவுருவச் சிலைக்கு கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக வர்த்தக அணி இணைச் செயலாளர் பி.டி.பாண்டி செல்வம், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ரமேஷ் பாபு மற்றும் பலர் உள்ளனர்.

### செ.தமிழ்வேந்தன் - எஸ்.புஷ்பராஜ் முன்னிலை! கே.அப்பு - டி.வினோத் தலைமை!

# 74வது வட்டத்தில் 20 கொடிக் கம்பங்களில் கொடியேற்றல் - 2 கல்வெட்டுகள் திறப்பு!

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு கழகக் கொடியை ஏற்றி வைக்கிறார்!

சென்னை, செப் 28-

75-ஆம் ஆண்டு தி.மு.க. பவளவிழாவை முன்னிட்டு கழகத் தலைவர் - தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைகிணங்க, சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி, 74- வது வட்டம் முழுவதும் 2 கல்வெட்டுகளும் 20 கொடி கம்பங்களில் கொடி ஏற்றும் விழா நாளை 29.09.2024 - ஞாயிற்றுக்கிழமை காலை 07.30 மணியளவில் அம்பேத்கர் மன்றம், ஏகாங்கிபுரத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு கே.அப்பு (எ) யோகனந்தன், ஐ.சி.எப்.டி.வினோத் ஆகியோர் தலைமை வகிகின்றனர். திரு.வி.க.நகர் வடக்கு பகுதி கழக செயலாளர் செ.தமிழ்வேந்தன், வட்ட கழக செயலாளர் எஸ்.புஷ்பராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். பெரம்பூர்.ஆர். ராஜன், டி.குகன் தேசிங்பாபு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர். கழகக் கொடியை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு ஏற்றி வைத்து சிறப்பிக்கிறார். கல்வெட்டை மேயர் பிரியாராஜன் திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் கலாநிதிவீராசாமி எம்.பி., ப. தாயகம்கவி எம்.எல்.ஏ., பி.சத்திஸ், டி.ராஜி, பி. இளன், வி.மதிமாறன், டி. செண்பகவள்ளி, கே.ஆர். சதீஷ், ஆ.மகேந்திரன், ஜி. சீனிவாசன், ஜி.எபிநேசர், எல்.போஸ், அ.அருள், பி. சேகர் மற்றும் இ.ராமமூர்த்தி, எஸ்.உதயகுமார், ஜெ.அன்பு, என்.அமுல் ராஜ், கே.தண்டபாணி, பி.ராமமூர்த்தி, எஸ்.ஸ்ரீதர், கணகசபாபதி, எஸ்.சீனிவாசன், கே.வெங்கடேசன், கே.லட்சுமணன், டி. மனோகரன் மற்றும் பலர் பங்கேற்றனர். த.வெங்கடேசன், எம்.யோகிஸ்வரன், என்.பாலகிருஷ்ணன், கே.புஷ்பா ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! க.ஜெயராமன் தலைமை!

# பெரம்பூர் தெற்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. - ஏ.சரவணன் பங்கேற்பு!

சென்னை, செப் 28-

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதியில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணி, பெருந்தலைவர் காமராஜர் மண்டபம் பழனியாண்டவர் கோயில் தெரு, செ11. இல் நடைபெறுகிறது.

இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, மாவட்டபொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

இக்கூட்டத்தில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தொகுதி பொறுப்பாளர் ஏ.சரவணன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுகின்றனர்.

பகுதி செயலாளர் க. ஜெயராமன் தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டங்களில் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்றஉறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகம் முகவர்கள், BLA2, BLC, கழகப் பொது உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி செயலாளர் க.ஜெயராமன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

# சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. அறிக்கை!

சென்னை, செப், 28 -

சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தல்படி, பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி, நந்தனம் மதி எம்.சி, எஸ். முரளி ஆகியோரின் ஆலோசனைக்கிணங்க, எனது தலைமையில் (ராஜா அன்பழகன் எம்.சி) இன்று (28.09.2024 சனிக் கிழமை) மாலை 6 மணியளவில், தி.நகர் பேருந்து நிலையம் அருகில் உள்ள சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

எனவே சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் கேட்டு கொள்கிறேன்.

பொருள்:

கழக இளைஞரணி சார்பில் நமது தென்மேற்கு மாவட்டம் தி.நகரில் உள்ள ஜெயின் கல்லூரியில் (29.09.2024) நடைபெற இருக்கின்ற "என் உயிரினும் மேலான"கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப்போட்டி பயிற்சி வகுப்புகள் குறித்தும், முத்தமிழறிஞர் கலைஞர் படிப்பகம் மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தி.மு.கழக பவள விழாவையொட்டி

# ஆலந்தூர் தெற்கு பகுதி சார்பில் நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்பீர்!

### பகுதி செயலாளர் என்.சந்திரன் வேண்டுகோள்!

சென்னை, செப்.28-

ஆலந்தூர் தெற்கு பகுதியினருக்கு பகுதி செயலாளர் என்.சந்திரன் வேண்டுகோள் வருமாறு

தி.மு.கழக பவள விழாவையொட்டி தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவரும் பங்கேற்று வாழ்த்துரை வழங்கும் மாபெரும் பொதுக் கூட்டம் பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாநகரில் - அண்ணா பயின்ற பச்சையப்பன் ஆடவர் கல்லூரி விளையாட்டு திடலில் இன்று 28 ஆம் தேதி மாலை 5 மணியளவில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள் இந்த வரலாற்று சிறப்பு மிக்க கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்துக் கொள்ளவது, "நமது உரிமை" - "நமது கடமை" என்ற அந்த உணர்வோடு, ஆலந்தூர் தெற்கு பகுதி முழுவதிலும் இருந்து பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்டபிரதிநிதிகள், வட்டநிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள், கழகத் தோழர்கள், அனைவரும், நாளை மாலை 4.30 மணிக்கெல்லாம் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலுக்கு அணி அணியாக திரண்டு வந்து பங்கேற்று சிறப்பிக்கும் படி இருகரம் கூப்பி ஆலந்தூர் பகுதி செயலாளரும்12 வதுமண்டலகுழுதலைவருமான என்.சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் நேற்று (27.09.2024) ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் (பொ) திருமதி ஆர்.லலிதா, நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சைதை மேற்கு பகுதி 139வது வட்டத்தில்! பவளவிழா முப்பெரும் விழாவை முன்னிட்டு! வி.பி.சிவக்குமார் தலைமையில்

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்குகிறார்!

### துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு! எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., முன்னிலை!

சென்னை, செப்.28-

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதி 139வது வட்டத்தில் கழகம் தோன்றி 75 ஆண்டுகளை முன்னிட்டு பவளவிழாவாகவும், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்த நாள், பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த நாள் கழகம் தோன்றிய நாள் ஆகியவற்றை முன்னிட்டு முப்பெரும் விழாவாகவும் நடைபெறுகிறது.

139வது வட்ட முன்னாள் துணைச் செயலாளர் வி.பி.சிவகுமார் தலைமையிலும், சைதை மேற்கு பகுதி கழகசெயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டல குழு தலைவருமான இரா. துரைராஜ், 140வது வார்டு மாமன்ற உறுப்பினரும், பொதுக்குழு உறுப்பினருமான வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன், பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், 139வது வார்டு மாமன்ற உறுப்பினர் ப.சுப்பிரமணி, மாவட்ட பிரதிநிதிகள் ஜி.கே.ராமச்சந்திரன், வி.மதிவாணன், டி.என்.சிவமணி, மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ். ஹரிபாபு மற்றும் மு.காளியப்பன், நியூகாலனி சம்பத், ஆயில் எல்.சரவணன், 139, 139 "அ" வட்ட கழக நிர்வாகிகள் மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், சாந்திசுந்தரம், எல்.சந்திரன், சி.டி.காசிநாதன், து.முரளி, ஏ.சுப்பிரமணி, வி.சபரி, த.மணி, ஆர்.அருண், எஸ்.ரவிக்குமார், ஜெ.ரவிச்சந்திரன், மு.அஜிம், சி.வி.பிரவீன், சு.பூபதி, இ.வரதன், மா. ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், பூபதிவெங்கடேசன், சுமதி தீனதயாளன், ஜி.ஏழுமலை, டி.சுரேஷ், டி.கோபாலகிருஷ்ணன், முகமதுஅலி, எஸ். ராஜேஷ், வே.புருஷோத்தமன், என்.தீனதயாளன், ஆர்.சுந்தரேசன், ராஜா ஆறுமுகம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மேற்கு சைதாப்பேட்டை ஜாபர்கான் பேட்டை கங்கையம்மன் கோவில் அருகில் நாளை (29.09.2024 - ஞாயிற்றுகிழமை) நண்பகல் 12 மணியளவில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் புதுப்பித்த கல்வெட்டில் கழக இருவண்ணக் கொடியேற்றி திறந்தும், 500 பேருக்கு அசைவ உணவான பிரியாணி வழங்கியும், 500 பேருக்கு டப் வழங்கியும் சிறப்புரையாற்ற உள்ளார்.

இதில் பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை மேயர் மு. மகேஷ்குமார், மாவட்ட அவைத்தலைவர் எஸ். குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், பகுதி கழக நிர்வாகிகள் த.சம்பத், ஆர். ரமேஷ், கவிதாகௌதமன், மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக், வட்டகழக செயலாளர்கள் ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம். நாகா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார்,

மாவட்ட அமைப்பாளர்கள் நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், கிண்டி ஆர்.எல்.செல்வம், பொன்ஜெய்சிங், ஆர்.ரவி, ஜி.பாபு, பால் கார்ரவி, அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள் கே.பிரபு, கே.தாஸ், ஆர். எஸ்.ரமேஷ், பி.ஆர்.துரைராஜ், எல்.கார்த்திக், கு. கார்த்திகேயன், சார்பு சரவணன், பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ம.சுகுமார், தீபக்கௌதம், ஆர். வெங்கடேசன், ஜிம்.கே. பிரபு, பா.மோ.கார்த்திக்,

கழக முன்னோடிகள் காரைக்குடி வி.செல்வம், கொரியா குமார், ஜெ. கவின், கே.கங்காதரன், ஆர்.தண்டபாணி, ஜே.கதிரவன், கே.விஜயகுமார், வி.வாசுதேவன், என். ரமேஷ், எஸ்.கண்ணன், பி.எழிலரசன், ஆர்.பெருமாள், ஆர்.தாமோதரன், ப.சிவக்குமார், எஸ். சையத்ஜலால், ஆர்.சரத்குமார், வி.சாமிநாதன், ஜே. சரவணன், சக்திவேல், க.சேகர், கே.குபேந்திரன், கண்ணன், ராஜ், ராஜேஷ், அயன் கண்ணன், பி. ராஜேஷ், கல்யாணி, ஜெகதீஷ், சக்தி, வெங்கடேசன், எஸ்.சந்துரு, சதீஷ், சி.சக்தி, மூர்த்தி, வினோத்கண்ணா, பிரகாஷ், கௌதம், செல்வம், சுரேஷ், ஆறுமுகம், மோகன், குட்டி தினகரன், கோகுல், சேகர், சுயராஜியம், ரகு, கார்த்திக், மங்கையர்திலகம், மல்லிகா, கமலாம்மாள், ராதாம்மாள், பச்சையம்மா, பத்மா, மைதிலி, செல்வி, ரோஷி, தேவி, அஜித்குமார், நாகேஷ், வெங்கடேஷ், மணிகண்டன், கார்த்திக், சந்துரு, சதிஷ், ஜானி, சுரேஷ், மோகன், மு.அருண், கோபி, ஜி.ரஞ்சித், வடிவேலன், ஞானவேலு, எஸ்.பி.தினேஷ், து.வினோத்குமார், அருண் கண்ணதாசன், சைதை சத்தியா, ம.திலிபன், பாபு, ரமேஷ், இளங்கோ, கன்னியப்பன், நன்மாறன், வி. வெங்கடேசன், பி.வெங்கடேசன், ராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

இறுதியாக இந்நிகழ்வில் அயாத்பாஷா, மூர்த்தி, விஐபி.சுரேஷ், நித்தியானந்தம், புறா ராஜா, வெங்கடேசன், நாகா, ஸ்கூல்தெரு ராஜா, விஜயகுமார், ஆட்டோ பிரகாஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - கூட்டணிக் கட்சித் தலைவர்கள் உரையாற்றும்

# காஞ்சிபுரம் தி.மு.க. பவள விழாப் பொதுக்கூட்டத்தில் பெருவாரியாக பங்கேற்பீர்!

### தாம்பரம் கிழக்குப் பகுதிக் கழகத்தினருக்கு மாடம்பாக்கம் ஆ.நடராஜன் வேண்டுகோள்!

தாம்பரம், செப். 28

காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி வணகத்தில் தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் தாம்பரம் கிழக்குப் பகுதி கழகத்தினர் ஆயிரக் கணக்கில் பங்கேற்பீர் என பகுதிக் கழகச் செயலாளர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தி.மு.க. பவள விழாவையொட்டி கொள்கைக் கூட்டணிக் கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ளும் மாபெரும் பொதுக்கூட்டம் பேரறிஞர் அண்ணா பிறந்த நம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இன்று (28.09.2014 சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு நடைபெகிறது.

இக்கூட்டத்தில் நம் ஒப்பற்றத் தலைவர் முதல்வர் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

இந்த வரலாற்று சிறப்பு மிக்க பொதுக்கூட்டத்திற்கு நமது காஞ்சீபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் படி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநகரச் செயலாளருமான எஸ்.ஆர்.ராஜா ஆலோசனைபடி நமது தாம்பரம் கிழக்குப் பகுதிக் குட்பட்ட மாவட்டக் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட அணிகளின் அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரையும், தாம்பரம் கிழக்குப் பகுதி கழகத்தின் சார்பில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர், தாம்பரம் நகரமைப்புக் குழுத் தலைவர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் தெற்குப் பகுதி 107 'அ' வட்டம் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் அண்ணா நகர் தெற்குப் பகுதி 107 'அ' வட்டக் கழகச் செயலாளர் வி.எம். சிவா தலைமையில் நடைபெறுகிறது. பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம் சிறப்புரையாற்றினார். இதில் ந.அதியமான், எம்.சி., இரா.பொன்ரங்கம், இரா. ரவீந்திரகுமார், ப.மகேஷ் ராஜா, தெ.கருணாநிதி, வழக்கறிஞர் வி.நன்மாறன், ராம்குமார், பானுமதி கிருஷ்ணசாமி, ஆர்.கே. கிட்டா, ஜெயக்குமார், எம். சதீஷ்குமார் மற்றும் பகுதி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள், கழக செயல்வீரர்கள் கலந்துகொண்டனர்.